05. விண்ணக தேவன் (வாழ்த்துப் பாடல்)
இயல்: கிறிஸ்து ராஜன்
இசை: மார்ட்டின் பிராண்சிஸ்
பாடியவர்: வல்லவன்
இசை இயக்கம்: Fr.டெனிஸ் வாய்ஸ்

பல்லவி

விண்ணக தேவன் மண்ணகம் வந்த நாளிது
மங்கள கீதம் மண்ணகம் எங்கும் கேட்குது
வானின் விடிவெள்ளி வாழ்வைத் தரும் அள்ளி
வாழ்த்து செய்தி சொல்லி நாமும் இணைந்து பாடி புகழுவோம்
Happy Christmas! Merry Christmas!
Happy Christmas! Merry Christmas!

சரணம்

1. கந்தையில் பொதிந்த தந்தையின் மைந்தன்
   விந்தையின் உயரமே
   ஏழ்மையின் கோலம் தாழ்மையாய் ஏற்று
   வாழ்ந்திட்ட புனிதமே
   வாக்குமாறா தேவன் நாமம் பாடிப் புகழுவோம்
   வான தூதர் கூட்டத்தோடு நாமும் மகிழுவோம்

2. சொந்தங்கள் இணைந்து பந்தங்கள் கலந்து
   ஒன்றென திகழுவோம்
   காலங்கள் தோறும் காயங்கள் ஆற்றி
   காத்திட தொழுகுவோம்
   ஏகதேவன் பாதம் தேடி வாரும் வணங்குவோம்
   ஏழை ஆயர் கூட்டத்தோடு நாமும் மகிழுவோம்.

This song is prepared by **Iniya Ithayangal Whatsapp group** and linked in **[www.manavai.com](http://www.manavai.com)**
**(Christmas 2021)**